# யூலை – 25 – வியாழன்

## புனித யாக்கோபு

**“உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்க பணியாளராக இருக்கட்டும்” மத்.20:27**

-------------------------------------------------------------

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 4 : 7 - 15

சகோதரர் சகோதரிகளே கடவுளின் மாட்சியாகிய செல்வத்தை மண்பாண்டங்கள் போன்ற நாங்கள் கொண்டிருக்கிறோம். இந்த ஈடு இணையற்ற வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை, அது கடவுளுக்குகே உரியது என்பது இதிலிருந்து விளங்குகிறது. நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம். இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுமாறு உயிரோடிருக்கும்போதே நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக் கிறோம். சாவின் ஆற்றல் எங்களிலும் வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகிறது. ”நான் கடவுள்மீது நம்பிக்கையோடு இருந்தேன் ஆகவே பேசினேன்” என்று மறைநூலில் எழுதியுள்ளது. அதற்கொப்ப நம்பிக்கை மனப்பான்மை கொண்டுள்ள நாங்களும் நம்புகிறோம் ஆகவே பேசுகிறோம். ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச்செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச்செய்து அவர் திருமுன் நிறுத்துவார் உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும். இவையனைத்தும் உங்கள் நன்மைக்கே நிகழ்கின்றன. இறையருள் பெறுவோரின் தொகை பெருகப்பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார். எங்கள் உடல் அழிந்து கொண்டிருந்தாலும் எங்கள் உள்ளார்ந்த இயல்பு நாளுக்கு நாள் புதுப்பிக்கப் பெற்று வருகிறது. எனவே நாங்கள் மனந்தளருவதில்லை.

**பதில்பாடல் :** கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு
அறுவடை செய்வார்கள்.

## நற்செய்தி : மத்தேயு 20 : 20 - 28

அக்காலத்தில், செபதேயுவின் மனைவி தம்மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். உமக்கு என்னவேண்டும்?” என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், ”நீர் ஆட்சி புரியும்போது என்மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச்செய்யும்” என்றுவேண்டினார். அதற்கு இயேசு, ”நீங்கள் என்னகேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?” என்றுகேட்டார். அவர்கள் ”எங்களால் இயலும்” என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, ”ஆம், என்கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவதோ எனது செயல் அல்ல. மாறாக அவ்விடங்களை என்தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்” என்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்துப்பேரும் அச்சகோதரர் இருவர் மீதும் கோபங்கொண்டனர். இயேசு அவர்களை வரவழைத்து, ”பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள் இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கு விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மை யானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிடமகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்றுகூறினார்.

**தியானம்:** நாம் எப்படியும் வாழலாம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன. முதல் வாசகத்தில் எந்தச் சூழலிலும் நாம் இறைவனில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் வாழவேண்டுமென எமக்கு அழைப்பு விடுக்கின்றது. மானிடமகன் தொண்டு ஏற்பதற்கல்ல தொண்டாற்றவே வந்தார். அவர் பலரின் மீட்பிற்காக தன்னையே பலியாககினார். அதிகாரம் பணி புரிவதனால் வரவேண்டுமே தவிர பணி பெறுவதனால் அல்ல. திருச்சபையின் கடமையும் இதுவே. உலகை ஆள்வோரின் அதிகார வெறியினால் அடக்கப்பட்டிருப்போருக்காக திருச்சபைப் பணியாளனாக மாறவேண்டும். அவ்வாறு பணிபுரியும் போது ஏளனம் செய்யப்படவும், புறக்கணிக்கப்படவும் தயாராக இருக்கவேண்டும். திருத்தூதர் பவுல் கூறவது போல் உயிரோடிருக்கும போதே அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக்கின்றோம். அப்போது இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படும். இறைமக்களாகிய நாம் இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளோம்.